

மதுரையில் நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பத்துக்கும் மேற்பட் டோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவ் வாறு கழகத்தில் இணைந்தவர்க ளில், அ.தி. மு.க. திருப்பரங்குன்றம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் M.ரமேஷ், திருப்ப ரங்குன்றம் நிலையூர் ஒன்றியச் செயலாளர் நிலையூர் முருகன், மாவட்ட வழக்கறிஞர் பிரி வுச் செயலாளர் வழக்கறிஞர் R. சேதுராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலா ளர் வழக்கறிஞர் M. ஜெய பிரசன்னா, திருப்ப ரங்குன்றம் விவசாயப் பிரிவுச் செயலாளர் P.பாண்டி, மாவட்ட இலக்கிய அணிச் செய லாளர் கவிஞர் P.மோகன்தாஸ் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். மாவட்டச் செயலாளர் கள் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தமிழ்நாட்டு இளைஞர்களின்-அரசு வேலைக் கனவைச் சிதைக்கும்

த.வெ.க. அரசின் 'அவுட்சோர்சிங்' நடவடிக்கைக்கு கடும் கண்டனம்!

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 31 -

மனிதநேய மக்கள் கட்சி யின் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவா ஹிருல்லா வெளியிட் டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசுத் துறை கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் (அவுட் சோர்சிங்) பணியாளர் களை நியமிப்பதற்காகத் தமிழக அரசு புதிய அரசா ணையை வெளியிட்டுள் ளது. அரசுப் பணியிடங்க ளைப் படிப்படியாக நிரந் தரப் பணியிலிருந்து ஒப்பந் தப் பணிகளாக மாற்றும் இந்த நடவடிக்கை, தமிழக இளைஞர்களின் எதிர்கா லத்தை இருளில் தள்ளும் மிக மோசமான முடி வாகும்.



அரசுப் பணிக்காகப் பல ஆண்டுகளாகப் படித்துத் தயாராகி வரும் லட்சக்க ணக்கான இளைஞர்களின் கனவுகளில் மண்ணள்ளிப் போடும் செயலாகவே இத னைப் பார்க்க வேண்டியுள் ளது. அரசுத் துறை களுக் குத் தே வை யா ன பணியாளர்களை வழங் கும் முகமையாக வெளி நாட்டு மனிதவளக் கழ கத்தை (Overseas Manpower Corporation Limited) தமிழக அரசு நியமித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

அரசு அலுவலகங்களில் கடைநிலைப் பணியாளர் கள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களில் நிரந்தர மாகப் பணியாற்றுபவர்க ளுக்கு வழங்கப்படும் ஊதி யத்துடன் ஒப்பிடும்போது, அவுட்சோர்சிங் முறையில் நியமிக்கப்படும் பணியா ளர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படும் சூழல் உருவாகும். இத னால் அரசுக்கான செல வைக் குறைப்பதாகக் கூறிக்கொண்டு உழைக்கும் தொழிலாளர்களின் உரி மைகளும் ஊதியமும் பறிக் கப்படும் அபாயம் உள் ளது. இது ஒருவகையான நிறுவனமயமாக்கப்பட்ட உழைப்புச் சுரண்டலாகும்.

இதனைவிட மிக முக்கி யமாக, இந்த அவுட்சோர் சிங் நியமனங்களில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை முறையாகப்பின்பற்றப்படு வதில்லை. இதனால் பிற்ப டுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், நிலை ஊழியர்கள் முதல் மேலாளர் நிலை வரையி லான பணிகளுக்குப் பணி யாளர்களை அவுட்சோர் சிங் முறையில் வழங்கும் பொறுப்பு இந்நிறுவனத்தி டம் ஒப்படைக்கப்பட்டுள் ளதாகத் தெரிய வருகிறது.

அரசுப் பணியிடங்களை பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புகள் பறிக் கப்படும் நிலை உருவாகி யுள்ளது.

தமிழ்நாட்டில் பல பத் தாண்டுகளாகப் போரா டிப் பாதுகாக்கப்பட்ட சமூக நீதிக் கொள்கைக்கு இந்நடவடிக்கை நேரடி யாக வேட்டு வைக்கிறது. அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டின் மூலம் சமூ கத்தின் விளிம்புநிலை மக்க ளுக்குக் கிடைத்துவரும் பிரதிநிதித்துவத்தையும் பொருளாதார முன்னேற் றத்தையும் இந்த அவுட் சோர்சிங் முறை பலவீனப் படுத்திவிடும்.

சென்னை, கோவை உள் ளிட்ட 20 மாவட்டங்க ளில் உள்ள அரசுத் துறைக ளிலும், மின்வாரியம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களிலும் கடை